**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 10.07.2025

**அசல் வழக்கு எண்.180/2014**

**வா.சா.1 – முருகேசன், த.பெ.சண்முகம்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்தின் மொத்த விலை என்ன என்றால் ரூபாய் **1,32,000** ஆகும். அந்தத் தொகையை ஆவணம் **10** முன்னிலைக்கு செலுத்தினேன் என்றால் சரிதான். ஆனால் அதில் அனாமத்து என்று உள்ளது அந்த கணக்கை அப்படிதான் எழுதுவார்கள். வீட்டுக்கான தொகை கொடுத்தாலும் அனாமத்து கணக்கில் தான் வைக்கப்படும் என்று கூறுவதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா உங்களிடம் என்றால் வீட்டு பத்திரம் பட்டா வீட்டு வரி பில்லு ஆகும். எந்த கால இடைவெளியில் கட்டினீர்கள் என்றால் ஐந்து தவணையாக கட்டினேன். உங்களிடம் காட்டப்படுகின்ற ஆவணத்தில் எண் **6** ல் அனாமத்து என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்த ரசீதுகளில் பிளாட் எண் இல்லை என்று சொன்னால் அது அவர்கள் செய்த தவறு ஆகும். பிளாட் எண் போடாமல் கொடுத்து விட்டீர்கள் பிளாட் எண் போட்டு கொடுக்கும்படி நீங்கள் கேட்டீர்களா என்றால் அந்த நேரத்தில் கொடுத்துவிட்டார்கள் நான் கேட்கவில்லை. எல்லா ரசீதுகளிலும் தனி அலுவலர் கையொப்பம் உள்ளதா என்றால் தனி அலுவலர் கையொப்பம் இல்லை. ஆனால் நீங்கள் தாக்கல் செய்த ஆவணத்தில் தனி அலுவலர் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் முக்கியமான ஆவணங்களில் போடுவார். ஒரு லட்சத்து **32** ஆயிரம் என்று கிரையம் நிர்ணயத்திற்கு கூட்டுறவு சங்கத்தில் தீர்மானம் ஏதாவது ஏற்படுத்தப்பட்டதா என்றால் எனக்கு துணை இயக்குனர் உத்தரவு கொடுத்துள்ளார். தீர்மானம் ஏற்றப்பட்டதா என்றால் இயற்றப்பட்டது. துணை இயக்குனரின் உத்தரவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தீர்மானம் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் அதிலேயே அது உள்ளது. ஏழிலிருந்து பத்து வரையிலான ரசீதுகள் முறையாக வகையில் பெறப்பட்டது இல்லை என்று சொன்னால் சரியில்லை. அதனால்தான் அதில் ஒருவர் இடத்திலும் ஒரு ஒரு தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியில்லை சரியான அலுவலர் முத்திரை கூட அதில் இல்லை என்று சொன்னால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.